## தேவ ராஜ்யத்தின் இரு பகுதிகள்

1. யேசுவும், அவருடைய உண்மை விசுவாச பக்தியுள்ள சபை வகுப்பாரும் ஆயிர வருடயுகத்தில் காணக்கூடாத ராஜரீக வகுப்பாராக இருக்கிறார்கள் என்றும், காணக்கூடாத தேவராஜ்யத்தின் காணக்கூடிய பிரதிநிதிகளாக மூப்பராகிய பாத்திரவான்களும், வாலிபராகிய பாத்திரவான்களும் இருப்பார்கள் என்றும், தேவ ராஜ்யம் காணக்கூடாத பரலோக பகுதியையும், காணக்கூடிய பூமிக்குரிய பகுதியையும் ஆக இரு பகுதிகளைக் கொண்டது என்றும் நாம் கூறலாம். அதாவது யேசுவும் அவரது உண்மை விசுவாச பக்தியுள்ள சபை வகுப்பாரும், அவர்களது உதவியாளர்களான திரள் கூட்டத்தாரும், தேவராஜ்யத்தின் காணக்கூடாத பரலோக பகுதியையும், மூப்பராகிய பாத்திரவான்களும் அவர்களது உதவியாளர்களான வாலிபராகிய பாத்திரவான்களும் தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியாயும் இருக்கிறார்கள்.
2. தேவ ராஜ்யத்தின் இந்த இருபகுதிகளைக் குறித்தும் வேதாகமத்தில் தெளிவாகப் பிரித்தும், தொனிப்பாகவும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்கண்ட பகுதிகள் அதனை தெரிவிக்கின்றன.
3. வேதபகுதிகள் சிலவேளைகளில் இந்த தேவராஜ்யத்தின் இரு பகுதிகளை ‘சீயோன்’ என்றும் ‘எருசலேம்’ என்றும் முறையே குறிப்பிட்டிருக்கின்றன. ஏசா 2:3. ‘திரளான ஜனங்கள் (ஆயிரவருட யுகத்து பூமியின் அநேக தேச மக்கள்) புறப்பட்டுவந்து (பூமியில் ஆளுகிற கிறிஸ்துவையும் சபையையும் - வச.2 - அறிந்து பொதுவான பிரகடனத்தை அறிவிப்பார்கள்), கர்த்தரின் (கிறிஸ்துவும் சபையுமான) பர்வதத்துக்கும் (ராஜ்யத்துக்கும்), யாக்கோபின் (மாம்ச இஸ்ரவேலரின்) தேவனுடைய ஆலயத்துக்கும் (மாம்ச இஸ்ரவேலரை பிரதிநிதிப்படுத்தும் தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவிடம்) போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். (அவரது கற்பனைகளையும், சத்தியக்கருத்துக்களையும், வாக்குத்தத்தங்களையும், அறிவு போதனைகளையும், தீர்க்கதரிசனங்களையும், சரீத்திரங்களையும், நிழல் நிஜங்களையும்,

அப்போது கற்பிப்பார்.) நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். (அவர்கள் ஒருவரையொருவர் அவர் என்ன வழிகாட்டுகிறாரோ அதில் நடப்போம் என்ற சிந்தனையைக் கொண்டு உற்சாகப்படுத்துவார்கள்). ஏனெனில் சீயோனிலிருந்து (கிறிஸ்துவும், சபையும் சேர்ந்த காணக்கூடாத செயலாற்றும் ராஜ்யத்தின் ஆளும் அதிகாரத்தைக் கொண்ட சீயோனிலிருந்து) வேதமும் (Law - பிரமாணமும்), எருசலேமிலிருந்து (மூப்பராகிய பாத்திரவான்களும், வாலிபராகிய பாத்திரவான்களும் சேர்ந்த காணக்கூடிய பகுதியிலிருந்து) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்'.

4.1 ஏசா 62:1,2 இந்த இரு சொல்லமைப்பையும் பயன்படுத்துகிறது. 'சீயோனினிமித்தமும், எருசலேமினிமித்தமும் நான் மவுனமயிராமலும், அதன் நீதி பிரகாசத்தைப் போலவும், அதன் ரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படும் மட்டும் அமராமலும் இருப்பேன். ஜாதிகள் (gentiles - புறஜாதிகள்) உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள். கர்த்தருடைய வாய் சொல்லும், புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்'. இங்கு கர்த்தர் என்பது 'யாவே' தேவனாகும். அவரே இதனை கூறுகிறார். யாவே தேவன், சீயோன் என்ற வார்த்தையைக் கொண்டு, இயேசு கிறிஸ்துவையும் சபையையும், இன்னும் ஒரு கருத்தில், அவர்களின் உதவியாளரான திரள் கூட்டத்தாரையும் சேர்த்து, காணக்கூடாத ராஜ்யபகுதியாக அழைக்கிறார்.

4.2 அவர்கள் நிமித்தம் தேவன் மவுனமாய் செயலற்றவராயிருக்கமாட்டார். மூப்பராகிய பாத்திரவான்களும், வாலிபராகிய பாத்திரவான்களுங்கொண்ட காணக்கூடிய ராஜ்ய பகுதியான எருசலேமுக்காக அவர் செய்ய தீர்மானித்ததை செய்யாதிருக்க மாட்டார். கிறிஸ்துவும் சபையும் மனுக்குலம் மத்தியில் நிலை நாட்டுகிற நீதியானது, அதைக்குறித்து மனுபுத்திரர் ஒருவராகிலும் திசைக்கெட்டுப் போகாதபடிக்கு, வெளிச்சமாகவும், தெளிவாகவும் ஆகும்வரை, (பிதாவாகிய) யாவே தேவன் தாம் தீர்மானித்ததை செய்யாது இருக்கமாட்டார். முற்றிலும் நியாயமாகவும், முற்றிலும்

கிரகித்து கொள்ளுகிறதாயும், முற்றிலும் புரிந்து கொள்ளுகிறதாயும் காரியங்கள் இருக்கும்படி செய்வார். எரிந்து பிரகாசிக்கிற விளக்காக ரட்சிப்பு இருக்கும்.

4.3 இந்த விளக்கு தேவனுடைய வார்த்தையாகும். வேதவாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிற காரியங்கள், குறிப்பாக பழைய ஏற்பாட்டின்படி, மோசே முதலான தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள், இவைகளோடு, நட்சத்திர அங்கத்தினர்கள் அதனை விளக்கிக்கொடுக்க எழுதின எழுத்துக்கள் அந்த வேளையில் பிரகாசிக்கிற விளக்காக இருக்கும்.

4.4 'ஜாதிகள் உன் நீதியை...... காண்பார்கள்'. இவர்கள், மோசேயையும் தீர்க்கதரிசிகளையும் விட்டுவிட்டவர்களும், சுவிசேஷயுகத்தில் இயேசு கிறிஸ்துவையும், சபையையும் புறக்கணித்தவர்க்களுமாவர். இந்த புறஜாதியார் கிறிஸ்துவினுடையதும் சபையினுடயதுமான நீதியை மனக்கண்களால் காண்பார்கள். "சகல ராஜாக்களும் உன் மகிமையைக் காண்பார்கள்". நித்திய ஜீவனை வெகுமதியாகப் பெற்றவர்கள், பூமியில் பாத்திரவான்களாகக் காணப்பட்டதினால், கிறிஸ்துவினுடையதும், சபையினுடையதுமான மகிமையைக் காண்பார்கள். அந்த மகிமை, காணக்கூடிய தேவராஜ்யப் பகுதியான மூப்பராகிய பாத்திரவான்கள் மேலும், வாலிபராகிய பாத்திரவான்கள் மேலும் பிரதிபலிக்கிறதையும் காண்பார்கள். "கர்த்தருடைய வாய்" (தேவன் தம்முடைய மனு புத்திரர்களோடு பேசும் தமது வாயாகிய வேதாகமும், நட்சத்திர வகுப்பார் அதனை புரிவதற்காக கொடுத்திருக்கிற விளக்க எழுத்துப் படைப்புகளும்) 'சொல்லும்' (விவரிக்கிற) 'புது நாமத்தால்' (கிறிஸ்துவுக்கும், சபைக்கும் புதிதான வேலையும், புது ஸ்தாபனமும், புது அதிகார வல்லமையும், புது அலுவல் மேலான உரிமையும் நிமித்தம், கொடுக்கப்படும் புது நாமத்தால்) 'நீ அழைக்கப்படுவாய்'.

5 யோவேல் 2:32, தேவராஜ்யம் இரு பகுதிகளைக் கொண்டதாயிருப்பதை நிரூபிக்க மற்றுமொரு வேத பகுதியாகும். "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தை (திரள்கூட்டத்தார் உதவியுடன் தேவ ராஜ்யமாக ஆண்டு வருகிற கிறிஸ்துவின் மூலமும், சபையின் மூலமும் யாவே தேவன் கிரியை செய்து கொண்டு வருகிற, காணக்கூடாத ராஜ்ய பகுதியை) தொழுது

கொள்கிறவனெவனோ அவன் ரட்சிக்கப்படுவான். கர்த்தர் (LORD - யாவே) சொன்னபடி (தேவன், பழைய ஏற்பாட்டில் மோசேயின் மூலமும், நான்கு பெருந்தகை தீர்க்கதரிசிகள் மூலமும், 12 குட்டி தீர்க்கதரிசிகள் மூலமும், யோசுவா, ரூத், 1 & 2 ராஜாக்கள், 1 & 2 நாளாகமம் மற்றும் இதர வேத வாக்கியங்களான தீர்க்கதரிசனங்கள் மூலமும் தீர்க்கதரிசனமாக கூறியிருக்கிறதின்படி), "சீயோன் பர்வதத்திலும்" (ஆவிக்குரிய பகுதியான தேவராஜ்யத்திலும்) "எருசலேமிலும்" (மூப்பராகிய பாத்திரவான்களும் வாலிபராகிய பாத்திரவான்களுங் கொண்ட பூமிக்குரிய பகுதியான தேவராஜ்யத்திலும் 'கர்த்தர் (LORD யாவே) வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும்' (அடிப்படையில் காணக்கூடாத ராஜ்யத்தின் பகுதியான கிறிஸ்துவும் சபையும், இரண்டாம் நிலையில் காணப்படுகிற ராஜ்யத்தின் பகுதியான மூப்பராகிய பாத்திரவான்களும் வாலிபராகிய பாத்திரவான்களுங்கொண்ட தேவராஜ்யத்திடம்) 'ரட்சிப்பு உண்டாயிருக்கும்' (ஆதாமின் சாபத்திலிருந்து இவர்கள் மூலம், தேவன், கீழ்ப்படிகிற அனைவருக்கும் விடுதலையைப் பெறுவதற்கான வேலையை செய்வார். ஏனெனில் இந்த விடுதலையை பெறுவதற்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டும், கீழ்ப்படிய மறுக்கிறவர்கள் விடுதலையைப் பெற்றுக்கொள்வதில்லை.)

6.1 அவ்விதம் இந்த மூன்று வேதபகுதிகளிலும், தேவராஜ்யத்தின் இருபகுதிகளை சீயோன் என்றும், எருசலேம் என்றும் முறையே காட்டப்படுகிறது. மற்ற வேதபகுதிகளில் இந்த இரு பகுதிகளும் வேறு முறையில் காட்டப்படுகிறது. சங்கீதம் 107:32, அவைகளில் ஒன்றாகும். **'ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி மூப்பர்களின் சங்கத்திலே அவரை போற்றுவார்களாக'.** ஜனங்களின் சபை என்பது சிறு மந்தை வகுப்பாரை அடிப்படையில் அர்த்தப்படுகிறது. இரண்டாவதாக, அவர்களோடு ஒத்துழைக்கும் பரலோகத்துக்குரிய தேவராஜ்ய பகுதியான திரள்கூட்டத்தாரையும் அர்த்தப்படுகிறது. 'மூப்பர்களின் சங்கம்' என்பது மூப்பராகிய வாலிபராகிய பாத்திரவான்களைப் பொருள்படுத்துகிறது. இவர்கள் பூமிக்குரிய தேவராஜ்ய பகுதியாகும்.

6.2 பரலோக பகுதியான கிறிஸ்துவும் சபையும், அழியாமையும் (Immortality), சாவாமையும் (incorruptibility) அவர்களது நித்திய பங்காக பெற்றிருப்பதினாலும், அவர்களோடு ஒத்துழைக்கும் திரள் கூட்டத்தார், அழியாமை அல்லாது, ஆனால் சாகாமை பெற்றிருப்பதாலும் காணக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். மூப்பராகிய பாத்திரவான்களும், வாலிபராகிய பாத்திரவான்களும் காணக்கூடாத தேவராஜ்யப் பகுதியுடன் ஒத்துழைக்கிற, பூமிக்குரிய காணக்கூடிய தேவராஜ்ய பகுதியாயிருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய திட்டத்தை அந்தகாலத்தில் செயல்படுத்துபவர்களாவர். இவர்கள், ஸ்துதி, கனம், மகிமை, மகத்துவம், அன்பு, கீழ்ப்படிதல் ஆகியவைகளை தேவனுடைய அந்த திட்டம் பூரண ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையுமுள்ள தேவனுக்கு நித்தியத்துக்கும் செலுத்தும்படி செயல்படுத்துவார்கள். அவர்கள், அதனை உண்மை விசுவாச பக்தியுள்ளவர்களில் அதனை நிறைவேற்றுவார்கள்.

7. ஏசா 32:1 இது நமது கருத்துக்குரிய மற்றொரு வேத பகுதியாகும். **‘இதோ ஒரு ராஜா நீதியாக அரசாளுவார், பிரப்புக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள்’.** இங்கு ‘ராஜா’ என்பது கிறிஸ்துவையும், அவரது சரீரமாகிய சபையையும் குறிக்கிறது. அவர்கள் தேவ ராஜ்யத்தின் பரலோக பகுதியாக நீதியாய் அரசாளுவார்கள். அவர்கள் செய்கிற அனைத்தும் நியாயத்தோடும் பூரண இணக்கமாய் இருக்கும். தேவ ஞானத்தோடும், வல்லமையோடும், நீதியோடும், அன்போடும் பூரண இணக்கமாய் இருக்கும். அவைகளை தங்களுடைய எல்லா கிரியைகளிலும், செயல்பாடுகளிலும் மகிமையாக பிரதிபலிப்பார்கள். மகாராஜா கொடுக்கிற போதனைகளின் கொள்கைகளுக்கு முழு இணக்கமாக, நியாயமாய் துரைத்தனம் பண்ணுகிற பிரபுக்கள், மூப்பராகிய பாத்திரவான்களும், வாலிபராகிய பாத்திரவான்களுமாவர். இவர்கள், கிறிஸ்துவும் சபையும் அவர்களது உதவியாளரான திரள்கூட்டதாரும் சேர்ந்த காணக்கூடாத ராஜ்ய பகுதிக்கு, காணக்கூடிய பிரதிநிதிகளாக, ராஜ்ய ஆளுகையை செயல்படுத்துவார்கள்.

8. ஆதி 22:17,18 தேவராஜ்யத்தின் இரு பகுதிகளை விளக்குகிற மற்றுமொரு வேதபகுதியாகும். இங்கு நமக்கு தேவனுடைய ஆணையினால் நிறுத்தப்பட்ட உடன்படிக்கை இருக்கிறது. "**நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து,**" (ஆபிரகாம், ஆபிரகாமுக்கான உடன்படிக்கையில் Abrahamic Covenant - விசுவாசமுள்ளவர்களுக்கு தகப்பனாக இருக்கிறான். அவ்விதம் ஆபிரகாம், ஆபிரகாமுக்கான உடன்படிக்கையை கொடுத்தவரும், அவரது வாக்குத்தத்ததினால் மட்டுமல்லாது அவரது ஆணையினாலும் கட்டப்பட்டவருமான தேவனால், தம்முடைய பிரதிநிதியாக வைக்கப்பட்டான்). **"உன் வித்தை** (Seed - சந்ததி என்பது சரியான மொழியாக்கமல்ல) **வானத்து நட்சத்திரங்களைப் போலவும்,"** (வானத்தின் நட்சத்திரங்களைப் போல் பெருகப்பண்ணப்படுகிறவர்கள், தேவராஜ்யத்தின் காணக்கூடாத பகுதியான, அடிப்படையில் யேசுவை தலையாகக் கொண்ட சிறுமந்தை வகுப்பாரும், இரண்டாம் படியில் அவர்களுடைய உதவியாளரான திரள்கூட்டத்தாரையும் அர்த்தப்படுத்துகிறது.)

8.2 "**கடற்கரை மணலைப் போலவும் பெருகப்பண்ணுவேன் என்றும்,**" (கடற்கரை மணல் பூமிக்குரியதாய் இருப்பதால் தேவராஜ்யத்தின் காணக்கூடிய பூமிக்குரிய பகுதியை அர்த்தப்படுத்துகிறது.) **"உன் சந்ததியார் (வித்து)** தங்கள் **சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்,"** (யேசுவும், சபையும் சேர்ந்த 'வித்து' என்பவர்கள், சாத்தான், உலகம், மாம்சம் ஆகிய எல்லா சத்துருக்களையும் மேற்கொள்ளுவார்கள். அவர்கள் சுவிசேஷ யுகத்திலும், யூத யுகத்திலும் தங்களுக்கு விரோதமாக நின்றவர்கள் அனைவரையும் மேற்கொள்ளுவார்கள்.) **"நீ என் சொல்லுக்குக் கீழ்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் (வித்துக்குள்) பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும், என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்".** (பூமியிலுள்ள எல்லா வம்சத்தாரும் குறித்தகாலத்தில், கிறிஸ்துவும் சபையும் சேர்ந்த அவர்களால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.)

9. பூமியிலுள்ள சகல ஜாதிகளும் தேவராஜ்யத்திற்கு கீழ்ப்படிய எவ்வளவு இணங்குகிறார்களோ அந்த விகிதத்தில் ஆசீர்வதிக்கப்படுவார்கள். சிலர் உண்மை நன்றி விசுவாச பக்தியோடுள்ள கீழ்ப்படிதலுக்கு இணங்குவார்கள்.

மற்றவர்கள் அவ்விதம் இணங்கமாட்டார்கள். எனினும் எல்லோரும் சில ஆசீர்வாதங்களையாவது அவர்களால் பெறுவார்கள். அதாவது ஆதாமின் மரணத்திலிருந்து எழுப்பப்படும் ஆசீர்வாதம், பிரகாசிக்கப்படுகிற ஆசீர்வாதம், நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெறுகிற ஆசீர்வாதம், நீதி நேர்மைக்கு ஏற்ற சாதகமான நிலைமையின் கீழ் வைக்கப்படுகிற ஆசீர்வாதம், அதன்பின்பு அப்படிப்பட்ட ஆசீர்வாதமான நிலைமைகள் அவர்களை சூழ்ந்திருக்க தேவனுக்கு ராஜவிசுவாசமாய் இருக்கிறார்களா என்பதை செயல் முறையில் காட்டுவதற்கான வாய்ப்பைக்கொண்ட ஆசீர்வாதம் முதலியனவாகும்.

10. சிலர் தங்களை விழத்தள்ளுவதற்காக, சாத்தானாலோ, அல்லது 1000 வருடயுகத்தின் முடிவில் சொற்பகாலத்தில் அவர்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களாலோ, எடுக்கப்படும் ஒவ்வொரு சோதனைகள், முயற்சிகள் மத்தியிலும் கடைசி அளவுவரை ராஜவிசுவாசமாய் இருப்பார்கள் அப்படிப்பட்ட உண்மை நன்றி விசுவாசபக்தியுள்ளவர்கள், இழந்துபோனதை திரும்பப்பெறுகிற ஆசீர்வாதத்தை (restitutional blessings) அனுபவித்துக் கொண்டு நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். அவ்விதம் இந்த வேதபகுதி, தேவராஜ்யத்தின் இருபகுதிகளை மட்டுமல்லாது, ஆயிரவருடயுகத்தில் செய்யப்படுகிற பூமியின் எல்லா வம்சங்களையும் ஆசீர்வதிக்கிற வேலையைப்பற்றியும் விவரிக்கிறது.

KINGDOM'S TWO PHASES EV 17